பக்கங்கள்: 06

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு





theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:11 14.11.2023 செவ்வாய்க்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

# கிரிக்கெட் வழக்கிலிருந்து விலகிய நீதிபதிகள்

கிரிக்கெட் இடைக்கால கட்டுப்பாட்டுக் குழுவின் செயற்பாடுகளை இடைநிறுத்தி இடைக்காலத்தடை விவகாரம் தொடர்பான விசாரணையில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தம்மிக்க கணேபொல ஆகியோர் இன்று (14) விலகியுள்ளார்.

இந்த வழக்குத்தொடர்பில் விளையாட்டுத் துறை அமைச்சரினால் தாக்கல் செய்யப்பட்ட பிரேரணை, நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன, விக்கும் களுஆராச்சி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில்



இன்று (14) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் இந்த வழக்கை விசாரிப்பதற்கு தமது கட்சிக்காரர் ஆட்சேபனை தெரிவித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார். விளையாட்டுத்துறை அமைச்சர், சில அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மை நியாயமற்ற முறையில் விமர்சித்ததன் காரணமாகவே இந்த வழக்கு விசாரணையில்.... (பக்:02)

இலங்கைக்கு தெற்கே நடுக்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இன்று ஏற்பட்டது. இது ரிக்டரில் 6.2 ஆக பதிவாகி இருந்தது.

## இலங்கைக்கு தெற்கே நடுக்கடலில் நிலநடுக்கம்

இலங்கையின் தென்கிழக்கில் இந்திய பெருங்கடல் பரப்பில் இன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்தியப் பெருங்கடலில் கடலுக்கு அடியே 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டது.... (பக்:02)

## கனடாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட யாழ்.யுவதி

கனடாவிலுள்ள தனது சகோதரியின் குடும்பத்தினரிடம் சென்ற யாழ்ப்பாண யுவதி ஒருவர் கனடா விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

கனடா விமானநிலையத்தில் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் போது, விசா பெறுவதற்காக யுவதி கொடுத்த தகவல்களும் விசாரணைகளின் போது கொடுத்த தகவல்களும் மாறுபட்டவையாக இருந்ததாகத் தெரிய வருகிறது. அத்துடன் யுவதியை அழைத்த சகோதரி குடும்பத்தினர் வழங்கிய தகவல்களும் தவறானவையாக இருந்த காரணத்தாலும் மேற்படி யுவதி திருப்பி அனுப்பப்பட்டதாக தெரியவருகின்றது.

கனடா வழங்கியுள்ள விசா சேவையில் இலங்கையர்கள் பலரும் தங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் கனடாவிற்கு அழைப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர். பல லட்சங்களைச் செலவழித்து ஏஜெண்டுகளின் மூலம் கனடா செல்ல விரும்பும் வடக்கு மக்கள் அதிலும் யாழ்ப்பாண மக்கள் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக செல்லும் பலர் கனடாவைச் சென்றடையவில்லை. கனடா வழங்கியுள்ள சலுகையை பயன்படுத்தி கனடா வாழ் புலம்பெயர் உறவுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்கள் உறவுகளை கனடாவுக்கு எடுப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மக்களை அச்சுறுத்தும் கனிய மணல் அகழ்வு

மன்னார் மாவட்டத்தில் மக்களை அச்சுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் கனிய மணல் அகழ்வு குறித்தும், கனிய மண்அகழ்வை நிறுத்த அரசு மற்றும் உரிய அமைப்புக்களும் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று (14.11.2023) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டம் முகம் கொடுக்கின்ற பிரச்சினையாக கனிய மணல் அகழ்வு உள்ளது. காற்றாலை மின்சாரம் அதற்கு அப்பால் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் சடுதியாக கனிய மணல் அகழ்வு அல்லது கனிய மணல் கொள்ளை அதிகமாக உள்ளது.

மன்னாரில் அண்மையில் சுமார் 13ற்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் கனிய மணல் அகழ்வுக்கான செயல்பாட்டை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் கனிய மணல் எவ்வளவு வலுவானது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அத்திட்டத்தை ஆராய்கின்ற போது மணல் மாத்திரமா? அல்லது வேறு ஏதும் கொள்ளைகள் இருக்கிறதா? என்பதை சிந்திக்கத் தோன்றுகிறது என்றார்.

இங்கிருக்கின்ற சாதாரண அதிகாரிகளுக்கும் தெரியாமல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. குறிப்பாக மேல் மட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகாரிகள் ஊடாக அது திணிக்கப்பட்டு இன்று மக்களின் வாழ்விடத்துக்குள் அது ஊடுருவி அந்த மண்ணை அகழ்வதற்காக வருகை தந்தனர். இது பெரிய பிரச்சினையாக இந்த மன்னார் மக்கள் எதிர் கொள்கின்றார்கள். இந்த மணல் அகழ்வினால் குறிப்பிட்ட கிராமமும் குறிப்பிட்ட பகுதி அல்ல இந்த மன்னார் தீவே பாதிக்கக்கூடிய ஒரு நிலையைக்கொண்டு வரும்என்று அச்சப்படுகின்றனர். இது தொடர்பில் அரசு அல்லது இது சார்ந்து செயல் படுகின்ற அமைப்புகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்” என்றார்.

# இலங்கைக்கு தெற்கே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து தென் கிழக்கில் 1326 கி.மீ. தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. இலங்கை தலைநகர் கொழும்பில் நிலநடுக்கம் மிகக் கடுமையாக உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இருந்தபோதும் இலங்கைக்கு இந்த நிலநடுக்கத்தால் எந்தவித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் என்பதால் சுனாமி பேரலை உள்ளிட்ட அச்சம் உருவாகி இருந்தது. தற்போதைய நிலையில் எது வித ஆபத்தும் இல்லை என்கின்றன புவியியல் துறை வட்டாரங்கள்.

# கிரிக்கெட் வழக்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து விலக தீர்மானித்ததாக தலைமை நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார். அதன்படி, இந்த மனு விசாரணை வேறு நீதிபதிகள் குழாமிற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், தனிப்பட்ட காரணங்களை முன் வைத்து மனுவை விசாரணை செய்வதிலிருந்து நீதியரசர் தம்மிக்க கணேபொல விலகியுள்ளார்.




## பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், திறைசேரியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோரே பொறுப்பேற்க வேண்டுமென உயர்நீதிமன்றம் அறிவித்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரி இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலனை செய்தபோதே உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

## ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் மாத்திரம் 11,80,946 சுற்றுலாப்பயணிகள்இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் ரஷ்யாவில் இருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின்எண்ணிக்கை 10 ஆயிரத்து 64 ஆகும்.

இந்தியாவில் இருந்து 9 ஆயிரத்து 535 சுற்றுலாப்பயணிகளும் ஜேர்மனியில் இருந்து 6 ஆயிரத்து 545 சுற்றுலாப்பயணிகளும் பிரித்தானியாவில் இருந்து 3 ஆயிரத்து 770 சுற்றுலாப்பயணிகளும் இலங்கை வந்துள்ளனர்.

# டொனால்ட் ட்ரம்பின் மூத்த சகோதரி காலமானார்

முன்னாள் பெடரல் நீதிபதியான திருமதி ட்ரம்ப் பாரி, மன்ஹாட்டனிலுள்ள தனது வீட்டில் இறந்து விட்டார். ஐந்தாவது அவென்யூ அடுக்குமாடி குடியிருப்பின் படுக்கையறைக்குள் 86 வயது மூதாட்டி சுயநினைவின்றியும் பதிலளிக்காமலும் காணப்பட்டதாகவும் நியூயோர்க் நகர காவல்துறை அவர் இறந்துவிட்டதாக உறுதிப்படுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளது. மரணமான ட்ரம்ப் பாரி அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் மூத்த சகோதரியாவார்.



# டெபிபுயலால் விமானங்கள் இரத்து

இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் சில பகுதிகளை டெபி புயல் தாக்கியதால் விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன மற்றும் ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்தில் சுமார் 100,000 வீடுகள், வணிகங்கள் ஆகியனவற்றில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

# கட்டுப்பாட்டை இழந்த ஹமாஸ் சூறையாடும் பொதுமக்கள்

காஸாவில் இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஒரு மாதத்துக்கும் மேலாக கடும் போர் நடைபெற்று வரும் நிலையில் தற்போது காஸாவில் ஹமாஸ் தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன. ஹமாஸின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் பொதுமக்கள் சூறையாடத் தொடங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேல் இராணுவம் காஸாவை நெருங்குவதால் பயங்கரவாதிகள் தெற்கு நோக்கி தப்பி ஓடிவிட்டதாகவும் இதனால் ஹமாஸ் அமைப்பின் பொருட்களை பொதுமக்கள் சூறையாடி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# இங்கிலாந்து பிரதமர் இல்லத்தில் தீபாவளி



இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் வீட்டில் தீபாவளிக் கொண்டாட்டம் நடைபெற்றது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் வீட்டில் நடந்த தீபாவளி விழாவில் கலந்து கொண்டார்.

அவருக்கு பிரதமர் ரிஷி சுனக் தேநீர் விருந்து அளித்தார்.

இந்த விருந்தில் ஜெய்சங்கரின் மனைவி, ரிஷி சுனக் மனைவி ஆகியோர் கலந்து கொண்டனர் என்பதும் அது மட்டும் இன்றி இந்திய கிரிக்கெட் விராட் கோலி கையெழுத்திட்ட பேட்டை மத்திய அமைச்சர் ஜெய்சங்கர், ரிஷி சுனக்கிற்கு பரிசாக வழங்கினார்.

# ஹமாஸின் முக்கிய தளபதி அகமது சியாம் கொல்லப்பட்டார்

ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதியான அகமது சியாம் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை (ஐ.டி.எஃப்) அறிவித்துள்ளது.

இவர், 1,000 பேரைபிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இஸ்ரேலிய பாதுகாப்புப் படை எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளது.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹமாஸ் அமைப்பின் முக்கிய மூத்த தளபதிகளில் ஒருவரான அகமது சியாம் இஸ்ரேல் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவர், ராண்டிசி மருத்துவமனையில் நோயாளிகள் உள்ளிட்ட 1,000 இற்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக சிறைப்பிடித்திருந்தார். காஸா மக்கள் தெற்கு நோக்கி வெளியேற விடாமல் தடுத்ததில் அகமது சியாமுக்கு முக்கிய பங்கு உண்டு. மேலும், சுரங்கப் பாதையில் பயங்கரமான ஆயுதங்களையும் அவர் மறைத்து வைத்திருந்தார் என இஸ்ரேல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வரி செலுத்தாத துணை அமைச்சர் இராஜினாமா

ஜப்பான்நாட்டைச்சேர்ந்த துணை நிதி அமைச்சர் கென்ஜி காண்டா என்பவர் தனது நிறுவனத்திற்கு சரியாக வரி செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. இதனையடுத்து அவர் உடனே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இதனால் ஜப்பான் பிரதமருக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக கூறப் படுகிறது. அவரது இராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# மருத்துவமனையுடன் தொடர்புடைய சுரங்க ஆதாரத்தை வெளியிட்டது இஸ்ரேல் இராணுவம்

காஸாவில் உள்ள ரன்டிசி மருத்துவமனையின் அடித்தளத்தில் சுரங்க பாதை அமைத்து ஹமாஸ் அமைப்பினர் மறைந்து இருந்ததற்கான ஆதாரமாக 6 நிமிட வீடியோ ஒன்றை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவில் தரைமட்டமாக்கப்பட்ட ஒரு கட்டடத்தில் ஒரு சுரங்கப் பாதையின் வழியை அதிகாரி ஒருவர் கண்டுபிடித்து, அந்த சுரங்கத்தின் வழியே உள்ளே செல்கிறார். இந்த சுரங்கத்தின் மறுபக்க வழி ரன்டிசி மருத்துவமனையில் திறக்கப்படுகிறது என அவர் விளக்குகிறார். இது போன்று தான் அல்-ஷிபா மருத்துவமனையிலும் உள்ளது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்து வருகிறது.



# பிரிட்டன் உள்துறை அமைச்சர் பதவி நீக்கம்



பிரிட்டனின் உள்துறை அமைச்சர் சுயாலா பிரேவர்மேன் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அண்மையில் நடந்த பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதை பொலிஸார் தவறிவிட்டதாக விமர்சித்ததால் சுயாலா பிரேவர்மேன் சர்ச்சையில் சிக்கினார். அவரை பதவி நீக்கம் செய்ய பிரதமர் ரிஷி சுனக்குக்கு கடுமையான அழுத்தங்கள் இருந்த நிலையில், இன்று அமைச்சரவை விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக சுயாலா நீக்கப்பட்டுள்ளார்.

சுயாலா பிரேவர் மேன் கன்சர்வேடிவ் கட்சியில் நன்கு அறியப்பட்டவராகவே இருந்தார். ஆனால், அவரது விமர்சனத்துக்குப் பிறகு உட்கட்சியிலேயே அவருக்கு எதிர்ப்பு எழுந்தது. பொலிஸார் இரட்டை வேடம் போடுவதாக அவர் விமர்சித்தது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அவருக்குப் பதிலாக ஜேம்ஸ் க்ளெவர்லி உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

## பட்ஜெட்டால் பயனடையப் போவது யார்?

**இலங்கையின் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க 2024 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேலோட்டமாகப் பார்க்கும் போது சம்பள அதிகரிப்பு, சலுகை, வீடு சொந்தமாதல், கல்விக்கான உதவி, காப்புறுதி போன்றவை மக்களைக் கவரும் வகையில் உள்ளன. இன்றைய விலைவாசியினால் இந்தச் சலுகைகள் ஏற்புடையனவையா? எனக் கேட்கத் தூண்டுகிறது.**

**பட்ஜெட் ஏற்கெனவே விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. தொழிற்சங்கங்கள் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளன, அவர்கள் 20,000 ரூபாய் ஊதிய உயர்வைக் கேட்டனர், மேலும் தொழில்முறை சங்கங்கள் தனிப்பட்ட வரிகளில் கணிசமான குறைப்புக் கோரின. அரசாங்கம் 10,000 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக உறுதியளித்துள்ளது, ஆனால் அது அரச ஊழியர்களுக்கு நீண்டகாலமாக காத்திருக்கும் அவர்களின் தனியார் துறை சகாக்கள் நிவாரணம் மூலம் எதையும் பெறமாட்டார்கள். தொழிலாளர்களின் அதிருப்தியானது தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் பொது எதிர்ப்புகளில் வெளிப்படும்.**

**நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க நிறைவேற்றுவதற்கு முன்னெடுத்திருப்பது அரசியல்-பொருளாதார உயர்நிலைச் செயலாகும். கடந்த ஆண்டு 7.8% சுருங்கிய திவாலான பொருளாதாரத்தை அவர் புதுப்பிக்க வேண்டியிருந்தது, இதனால் நாடு முதல் முறையாக வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.**

**பட்ஜெட் 2024 இன் படி, மாநில செலவீனம் ரூ.6.98 டிரில்லியனாக இருக்கும், இது 2023 உடன் ஒப்பிடும்போது 33% அதிகமாகும் மூலதனச் செலவு இருமடங்கு அதிகமாகி ரூ.450 பில்லியன் வங்கி மறுமூலதனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பட்ஜெட் பற்றாக்குறை 9.1% என மதிப்பிடப்பட்டுள்ளது. இது எதிர்பார்த்ததை விட சற்றே குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது, ஆனால் அசல் இலக்கைவிட அதிகமாகும், இது 7.9% ஆகும். ஆனால் அது IMF அனுமதித்த வரம்புக்குள் உள்ளது. எவ்வாறாயினும், வங்கி மறுமூலதனத்திற்கான நிதி ஒதுக்கீடு பட்ஜெட் பற்றாக்குறையை அதிகரிக்க வழிவகுக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.**

**அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு என ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார். தேர்தலுக்கான முன்னேற்பாடாக பல அறிவிப்புகள் பட்ஜெட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த சலுகைகளும் அறிவிப்புகளும் வாக்களிப்பவர்களின் மனதைத் தொடுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் முன்னர் ஆஹா... ஓஹோ... எனப் புகழ்ந்தவர்களின் குரலைக் காணவில்லை.**

**பட்ஜெட்டில் என்ன இருக்கிறது என்பதை விளக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர்கள் வழமைபோல காட்டமாக விமர்சிக்கின்றனர். 'பயனற்ற மற்றும் ஏமாற்றும் பட்ஜெட்' எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச**

**'மக்கள் மீது அதிக அழுத்தத்தை திணிக்கிறது' எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா**

**'கடந்த ஆண்டிலிருந்து பெரும்பாலான திட்டங்கள் உள்வாங்கப்பட்ட பட்ஜெட்.' ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ**

**'புதிதாக எதுவும் இல்லை' - சுதந்திர மக்கள் காங்கிரஸின் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத்**

**வருமான மதிப்பீடு எதுவும் முன்வைக்கப்படவில்லை - எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா**

**எதிர்காலத்தில் வெடிகுண்டு உருகி வெடிக்கும் - உச்ச லங்கா கூட்டமைப்பு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில**

**தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் எதுவுமில்லை - எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்**

**'பாதுகாப்புச் செலவுகள் மீண்டும் உயர்ந்தன' - தமிழ் மக்கள் தேசிய கூட்டணித் தலைவரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**

**மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதற்கு யாரும் முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. மக்களின் கருத்துகள் ஊடகங்களில் பகிரப்படுவதில்லை. மக்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் ஆண்டு எப்போது வரும் என மக்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்றைய தீர்ப்பு அரசியல்வாதிகளுக்குப் படிப்பினையாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.**

# கடும் மழையால் மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாக்கம் காரணமாக இலங்கை முழுவதும் சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. மன்னார் மாவட்டத்தில் நேற்று (13) காலை முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன் தாழ்நில கிராமங்கள் பல நீரில் மூழ்கியுள்ளது.

மக்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல வீடுகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் பட்சத்தில் தாழ்நில கிராம மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும்.

# ரயில் சேவைகள் பாதிப்பு

இயந்திரக்கோளாறு காரணமாக இன்று (14.11.2023) காலை முதல் பல ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இயந்திரத்கோளாறு காரணமாக இன்று காலை களுத்துறையிலிருந்து கொழும்பு கோட்டை வரை பயணிக்க இருந்த தொடருந்து இரத்து செய்யப்பட்டுள்ளது.

சிலாபத்தில் இருந்து பாணந்துறை வரை பயணிக்கும் தொடருந்து கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் வரை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

தொழில்நுட்பக்கோளாறு காரணமாக கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் இருந்து இன்று காலை 6.40க்கு பெலியத்த நோக்கி புறப்படவிருந்த தொடருந்து சேவையும் தாமதமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் பெற்றோல் குண்டு தாக்குதல்

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டுமடம் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மீது நேற்று (13) இரவு பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இரு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முரண்பாடே தாக்குதல் சம்பவத்திற்கு காரணமென முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நட்டஈடு தொடர்பாக அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்தல் தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றில் இன்று (14) கருத்துத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க நீதி மன்றம் உத்தரவிட்ட 311 மில்லியன் ரூபாயில் 36, 825,000 ரூபா பணத்தை இழப்பீட்டு அலுவலக நிதிய கணக்கிற்கு கிடைத்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்க வேண்டிய 100 மில்லியன் ரூபா பணத்தில் 15 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர 1,725,588 ரூபாவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 1,725,588 ரூபாவும் முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் 5 மில்லியன் ரூபாவும் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன 4.1 மில்லியன் ரூபாவும் இது வரை செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நட்டஈடு தொகை முழுமையாக வைப்பிலிடப்பட்டதும் பாதிக்கப்பட்டோருக்கு நீதிமன்றத்தின் கண்காணிப்புடன் நட்டஈடு செலுத்தப்படும் என்றும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதன் போது மேலும் குறிப்பிட்டார்.

# பூநரி சந்தைகளில் இரசாயன பழங்கள் அழிப்பு

பூநகரிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், பழவிற்பனை நிலையங்கள் சந்தைகள் ஆகியவற்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டபோது களஞ்சியப்பகுதி, விற்பனைப் பகுதிகளில் மாசடையும் வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்கள் அழிக்கப்பட்டதோடு, வழக்குத் தாக்கல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பழவிற்பனை நிலையங்கள் சோதனையிடப்பட்ட போது, அங்கு பழங்களைப் பழுக்க வைக்கப்பயன்படுத்தும் இரசாயனங்கள்,தெளிகருவிகளுடன் கண்டுபிடிக்கப்பட்டது. பழவியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு பாதுகாப்பான முறையில் பழங்களைப் பழுக்க வைக்கும் முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

## அடுத்த மின்கட்டண திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம்

மழையுடன் கூடிய கால நிலை காரணமாக நீர்மின் உற்பத்தி அதிகரித்துள்ளதால், அடுத்த மின் கட்டண திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும் என மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரான மின்சார பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலை தொடரும் பட்சத்தில் இந்த நிவாரணத்தை வழங்க முடியும். தற்போது தேசிய மின்சார உற்பத்தியில் 52 வீதம் நீரால் உற்பத்தி செய்யப்படுகிறது. மின் உற்பத்தி நிலையங்களை சுற்றியுள்ள பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

## வரவு செலவுத்திட்டத்தைப் பாசாங்குத்தனமாக எடுக்கக்கூடாது

ஜனாதிபதி இந்த வரவு செலவுத்திட்டத்தை மிகவும் கடினமான நிலையில் இருந்து சமர்ப்பித்துள்ளார், எனவே நாம் பாசாங்குத்தனமாக இருக்கக் கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நேற்று (13) தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்ட உரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

நாடு கடுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். நாட்டைப் பிணைக்கும் சங்கிலிகள் உடைக்கப்பட வேண்டும். அவர்களில் பெரும்பாலானவர்கள், அதாவது 90 சதவீதம் பேர் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆயிரக்கணக்கில் அதிகரிக்க முடியும். இந்த வரவு



செலவுத்திட்ட உரையிலிருந்து அடுத்த ஆண்டு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பதை உறுதியாக அறிந்துகொண்டதாகவும் அவர் கூறினார்.

## குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் இராஜினாமா செய்வேன்-தேசபந்து

இலங்கை கிரிக்கெட்டின் இரகசிய ஆலோசனைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகக் கூறப்பட்ட கூற்றை நிராகரித்த டி.ஐ.ஜி தென்னகோன் நிரூபிக்கும் ஆதாரங்கள் ஏதேனும் இருந்தால், அவர் உடனடியாக தனது தற்போதைய பதவியை இராஜினாமா செய்வார்.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட கடிதங்களின் படி, இலங்கை கிரிக்கெட்டில் தென்னகோனுக்கு ஆலோசகர் பாதுகாப்பு மற்றும் மார்ஷலிங்கின் ஆலோசகராக ஒரு இரகசிய ஆலோசனைப் பங்கை ஆகஸ்ட் 7, 2021 அன்று இரண்டு வருட காலத்திற்கு வழங்கியது. இந்த சலுகையில் 150,000 ரூபாய், 200 லீற்றர் பெற்றோல், போன் அழைப்புகளுக்கு 5,000 ரூபா, மடிக்கணினி மற்றும் மருத்துவக் காப்பீடு ஆகியவை அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மதுபானக் கடைகள் 24 மணிநேரமும் திறக்க வேண்டும் டயானா

மதுபானக் கடைகள் மற்றும் மதுபானசாலைகளுக்கு அதிக நேரம் திறந்திருக்கும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை இராஜாங்க



அமைச்சர் டயானா கமகே வரவேற்றுள்ளார்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், "இந்த முன்மொழிவால் நான் மகிழ்ச்சியடைகிறேன். மதுபானக் கடைகள் மற்றும் மதுபான சாலைகளை மூடும் நேரத்தை நீடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த அதேவேளை, அவை 24 மணி நேரமும் திறந்திருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## கிரிக்கெட் தடை ஐந்தாண்டுகள் நீடித்தாலும் பரவாயில்லை: சரத் பொன்சேகா

கிரிக்கெட் தடை ஐந்தாண்டுகள் நீடித்தாலும் பரவாயில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா களனியில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தார். அப்பதவிக்கு கிரிக்கெட் தலைவர் நியமிக்கப்பட்ட பிறகு கிரிக்கெட் சரிந்ததை உணர்ந்தோம். கிரிக்கெட் இன்று வியாபாரமாகிவிட்டதால், குடும்பங்கள் ஒப்புதலுடன் வெளிநாட்டுப் பயணம் செல்வதைப் பார்க்கிறோம். இந்த நாட்டில் சம்பளம் கொடுப்பது கடினம். கிரிக்கெட் என்பது ஒவ்வொருவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இல்லை. கிரிக்கெட் தடை ஐந்தாண்டுகள் நீடித்தாலும் பரவாயில்லை. இதை முற்றிலுமாக நிறுத்தி ஐந்தாண்டுகளுக்குள் படிப்படியாக மீட்க வேண்டும்.

தொழிலதிபர்கள் இதில் வலம் வருகின்றனர். மைதானம் கூட இல்லாத கிரிக்கெட் சங்கங்கள் நாடு முழுவதும் உள்ளன. அது அவர்களின் வாக்குகளின் உதவியோடு தவழ்கிறது. இந்த நேரத்தில் நான் அமைச்சரின் பக்கம் இருக்கிறேன் என்றார்.

## மாடியிலிருந்து விழுந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதி

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செர்பென்டைன் அடுக்குமாடிக் குடியிருப்பின் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்து நேற்று




சிறுவன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொரளை மெகசின் வீதியில் வசிக்கும் 16 வயது சிறுவன் வீட்டில் இல்லாததை அறிந்து அவரைக் தேடியுள்ளார். அவர் அடிக்கடி செல்லும் இடமான அடுக்குமாடிக் குடியிருப்பின் மூன்றாவது மாடியிலுள்ள வீட்டிற்குச் சென்று அழைத்த போது வீட்டுக்குள்ளிருந்த சிறுவன் தாய்க்குத் தெரியாமல் பின் ஜன்னல் வழியாகக் கீழே இறங்க முற்பட்டுள்ளார். அப்போது, சிறுவன் மாடியில் இருந்து விழுந்ததால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## பட்ஜெட் மக்களை ஏமாற்றும் ஊடக சர்க்கஸ் சஜித்

அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் ஒரு ஊடக சர்க்கஸ் என்றும் மக்களை ஏமாற்றும் முயற்சி என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று கடுமையாக சாடினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு செலவுத்திட்ட உரையின் பின்னர் பாராளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய சஜித் ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது உரையில், மேம்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஜனவரி 2024 முதல் நடைமுறைக்கு வரும் அதே



வேளையில், ஏப்ரல் முதல் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும். ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் அடுத்த வருடம் நடைபெறும்.

உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது பயனுள்ள முன்மொழிவுகள் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளதா? என பிரேமதாச கேள்வி எழுப்பினார். "முன்வைக்கப்பட்ட பல முன்மொழிவுகள் கடந்த ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டவை போலவே இருந்தன, ஆனால் அவை அரசாங்கத்தால் செயல்படுத்தப்படவில்லை," என்று அவர் கூறினார்.

# இந்தியா–நியூஸ்லாந்து பலப்பரீட்சை

உலகம் முழுவதுமுள்ள ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களின் கவனமும் நாளை நடைபெற உள்ள உலகக் கோப்பையின் முதல் அரையிறுதிப் போட்டியின் மீதுதான் உள்ளது. மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நடைபெறும் போட்டியில், புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த இந்திய அணியை, நான்காவது இடம்பிடித்த நியூஸ்லாந்து அணி எதிர்கொள்ள உள்ளது. இதில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற உள்ள முதல் அணி எது என்பதுதான் தற்போதைய மிகப்பெரிய எதிர்பார்ப்பாக இருக்கிறது. இந்நிலையில், போட்டி நடைபெறும் வான்கடே மைதானத்தின் தன்மை மற்றும் யாருக்கு சாதகமானது என்பது குறித்து சற்று விரிவாக இங்கு ஆராயலாம்.



**பேட்ஸ்மேன்களுக்கு சாதகமான வான்கடே மைதானம்:**

அளவில் சிறியதான வான்கடே மைதானம் எப்போதுமே பேட்ஸ்மேன்களுக்கு மிகவும் சாதகமானதாக உள்ளது. பேட்ஸ்மேன்களின் அதிரடிக்கு பெயர் போன இந்திய மைதானங்களில், வான்கடே மைதானத்திற்கு தனி இடம் உண்டு. பவுண்டரி மற்றும் சிக்ஸர்கள் என்பது சர்வசாதாரணமான விடயமாகும். நடப்பு உலகக் கோப்பையில் இந்த மைதானத்தில் 4 லீக் போட்டிகள் நடைபெற்றன. அதில் 3 போட்டிகளில் முதலில் விளையாடிய அணிகள் 350இற்கும் அதிகமான ரன்களை எளிதாகக் குவித்தன. தொடர்ந்து பிரமாண்ட வெற்றிகளையும் பதிவு செய்தன. அவுஸ்திரேலிய அணி மட்டுமே மேக்ஸ்வெல்லின் அபார ஆட்டத்தால் சேஸ் செய்து வெற்றி பெற்றது.

**பந்துவீச்சாளர்களுக்கு சாதகமா?**

பகல் இரவு ஆட்டங்களில் முதலில் பேட்டிங் செய்யும் அணிக்கு, வான்கடே மைதானம் சொர்க்கபுரியாக அமையும். அதேநேரம், இரண்டாவது இன்னிங்ஸில் பந்துவீச்சாளர்களின் கை ஓங்கக் கூடும். சுழல் பந்து வீச்சுக்கும் சாதகமாக ஆடுகளம் செயல்படும். ஆனால், லைன் மற்றும் லெந்தில் பந்துவீச்சாளர்கள் துல்லியமாக செயல்பட வேண்டியது அவசியம். காரணம் இரண்டாவது இன்னிங்ஸின் போது பனிப்பொழிவு பந்துவீச்சாளர்களை மோசமாக சோதிக்கக் கூடும். சிறிய பவுண்டரி எல்லைகள் என்பதால், பந்து வீச்சாளர்கள் சிறிய தவறு செய்தாலும் பேட்ஸ்மேன்கள் பவுண்டரி மற்றும் சிக்ஸர்களை எளிதில் விளாச முடியும். ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான சேஸிங்கில் அவுஸ்திரேலிய வீரர் மேக்ஸ்வெல் நடத்திய ருத்ரதாண்டவம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

**போட்டியைத் தீர்மானிக்கும் முதல் 10 ஓவர்கள்:**

வான்கடே மைதானத்தில் முதல் இன்னிங்ஸோ அல்லது இரண்டாவது இன்னிங்ஸோ, முதல் 10 ஓவர்களில் பொறுப்பாக விளையாட வேண்டியது மிகவும் முக்கியம். காரணம் இந்த ஆடுகளத்தில் புதிய பந்தை வேகப்பந்து வீச்சாளர்கள், இரண்டு பக்கங்களிலும் எளிதில் ஸ்விங் செய்ய முடியும். எனவே, வான்கடே மைதானத்தில் இந்திய அணி வெற்றி பெற வேண்டுமானால், முதலில் பேட்டிங் செய்தால் பவர்பிளேயில் விக்கெட்டுகளை இழக்காமல் இருக்க வேண்டும். அதுவே, பந்து வீசினால் தொடக்கத்திலேயே நியூஸ்லாந்து அணியின் டாப்- ஆர்டரை ஆட்டமிழக்கச் செய்ய வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே எதிரணி மீது அழுத்தத்தை போட்டு இந்தியாவால் வெற்றி பெறமுடியும். உதாரணமாக அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் தொடக்கத்தில் நிலைத்து நின்று ஆடியதால்தான் ஆப்கானிஸ்தான் அணியால், மிடில் ஓவர்களில் விக்கெட்டுகளை இழந்தாலும் இறுதியில் 292 ரன்கள்வரை சேர்க்க முடிந்தது. அதேபோட்டியில் முதல் 10 ஓவரிலேயே அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இறுதியில் மேக்ஸ்வெல் தனது அபார ஆட்டத்தால் வெற்றியை தேடித்தந்தார். எனவே, பேட்டிங்கோ, பந்து வீச்சோ முதல் 10 ஓவர்களில் இந்திய அணி கூடுதல் கவனமாகவும், பொறுப்புடனும் செயல்பட வேண்டியது அவசியம்.

**வான்கடே மைதானம் தொடர்பான புள்ளி விபரங்கள்:**

வான்கடே மைதானத்தில் இதுவரை 27 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன. அதில், முதலில் பேட்டிங் செய்த அணிகள் 14முறையும் இரண்டாவதாக விளையாடிய அணிகள் 13முறையும்வெற்றி பெற்றுள்ளன. இந்த மைதானத்தில் முதல் இன்னிங்ஸின் சராசரி ஸ்கோர் 261 ரன்கள். வான்கடே மைதானத்தில் அதிகபட்சமாக தென்னாபிரிக்கா அணி 438 ரன்களையும் குறைந்தபட்சமாக இலங்கை அணி 55 ரன்களையும் பதிவு செய்துள்ளது. நடப்பு உலகக் கோப்பையில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக அவுஸ்திரேலிய அணி 293 ரன்களை சேஸ் செய்ததுதான், வான்கடே மைதானத்தில் நடைபெற்ற அதிகபட்சமான சேஸிங்காகும்.

## அரையிறுதியின் போது மழையால் போட்டி நின்றால் விதி கூறுவது என்ன?






நியூஸ்லாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது அரையிறுதி போட்டி இன்று நவம்பர் 15 ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற உள்ளது. இன்று நடைபெறும் முதலாவது அரையிறுதிப்போட்டியின் போது மழையால் போட்டி நின்றாலோ அல்லது இரு அணிகளுமே குறைந்தது 20 ஓவர் பேட்டிங் செய்யாமல் இருந்தாலோ போட்டி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படும் அவ்வாறு மழையால் போட்டி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படுமாயின் ரிசர்வ் டே விதி முறைகள் எல்லாம் இப்போட்டிக்கு கிடையாது. புள்ளிப்பட்டியலின் அடிப்படையில் அந்த இரு அணிகளில் எந்த அணி மேலே இருக்கிறதோ அந்த அணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும். 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் போது அரை யிறுதி போட்டியில் நியூஸ்லாந்து அணியிடம் இந்திய அணி தோல்வியடைந்தது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 14.11.2023 அன்று வெளியிடப்பட்டது.